பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 20 ஞாயிற்றுக்கிழமை (04 07 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 218

## கரும்புலிகள் தினம் நாளை குடாநாடு எங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். குடாநாடெங்கும் கரும்புலிகள் தினம் நாளை மிகவும் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படும்.

கரும்புலிகள் தினத்தையொட்டி சிரமதான வேலைகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் என்பன சிற்றூர், வட்ட, கோட்ட மட்டங்களில் பரவலாக நடைபெற உள்ளன.

கோட்ட மட்டத்தில் பிரமாண்டமான பொதுக் கூட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பம்பைமடுவில் 43 பயணிகள் படையினரால் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

தாண்டிக்குளம் வழியாக வவுனியாவுக்குச் சென்று அங்கிருந்து மன்னார் செல்லவிருந்த 43 தமிழ் பயணிகள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பயணிகளை பஸ் ஒன்றில் ஏற்றிச் சென்ற இராணுவத்தினர், பம்பைமடுவில் அவர்களைத் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

### இயல்புநிலை திரும்பி விட்டதாக காட்ட

# மட்டு. அகதி முகாம்களை மூடிவிட அரசாங்கம் முயற்சி

## தமிழ்மக்கள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பி விட்டதாக வெளியுலகிற்குக் காட்டுவதற்காக—

அங்குள்ள அனைத்து இடம்பெயர்ந்தோர் முகாம்களையும் மூடிவிடுவதற்கான முன்முயற்சிகளில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது.

இதற்கு அங்குள்ள தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருவதாகத் தெரியவருகிறது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பராமரிப்புக்கென வழங்கப்பட்டு வந்த நிதி ஏற்கனவே அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சில இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

மூன்று மாதகாலத்துக்கு மட்டுமே உலர் உணவு விநியோகமும் வழங்கப்படும் எனவும் அரச அதிகாரிகள் அறி

(2 ஆம் பக்கம் பார்க்க)

### பொருள்கள் பற்றாக்குறையால்

## குடாநாட்டு மக்கள் கஷ்டப்படுகின்றனர்

### விடுவிக்கப்பட்ட பொலீஸார் பேட்டி

கொழும்பு, ஜூன் 4

தற்போதைய யுத்தம் காரணமாக யாழ். குடாநாட்டு மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறையினால் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

சமீபத்தில் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பொலீஸ்காரர்களில் ஒருவரான கமகே பிரேமதாச அபேவிக்கிரம கொழும்பில் பத்திரிகையாளரான எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொலீஸ்காரர் தற்போது நாரஹேன்பிட்டியவில் உள்ள பொலீஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

வைத்தியசாலையில் வைத்தே அவர் பேட்டி வழங்கி

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தொப்பிகல பகுதியில் சண்டை படையினர் மூவர் காயம்

கிழக்கில் தொப்பிகல பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் மூவர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளைத் தேடிஅழிக்கும் நடவடிக்கை தொடர்வதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொப்பிகல பகுதியில் படையினர் மறைந்திருந்து தாக்குதல் நடத்திய சமயம், விடுதலைப் புலிகள் தரப்பிலும் இழப்புக்கள் ஏற்பட்டன என்றும்—

அப்போது இடம்பெற்ற மோதலின்போது படையினர் தரப்பில் மூவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-6]

## மேல் மாகாண சபை ஆட்சி கைமாறுமா?

கொழும்பு, ஜூலை 4

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வசம் உள்ள மேல் மாகாணசபை, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கைமாறும் நிலைமை உருவாகிவருவதாக 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன் பி.பி.சி சிங்களச் சேவையில் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி தற்போது 43 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 41 உறுப்பினர்களையும் காமினி திஸ்ஸாநாயக்க தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 17 உறுப்பினர்களையும் மேல் மாகாண சபையில் கொண்டுள்ளன.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான பேச்சுவார்த்தை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-அரசு நடத்தி வந்த பேச்சை குழப்பியது யார்?

### சிங்கள பத்திரிகையாளர்களைச் சாடுகிறார் தேரர்

கொழும்பு, ஜூன் 4

அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் யுத்தக் கைதிகள் தொடர்பாக ஆரம்பமான பேச்சு வார்த்தைகள் குழம்புவதற்கு சிங்கள பத்திரிகைகளில் வெளியான புரளித்தனமான—தவறான தகவல்களே காரணமாகும்.

சிங்கள பத்திரிகையாளர்கள் சிங்களமக்கள்மத்தியில் செய்த புரளித்தனமான பிரசாரமே பேச்சுவார்த்தையைக் குழப்பிவிட்டது.

இவ்வாறு சாடியுள்ளார் மாதம்பாகம அஸாஜிதேரர்.

சர்வமத சமாதான அமைப்பின் செயலாளரான அஸாஜி தேரர் கடந்த பல மாதங்களுக்கு முன்னர் யுத்தக்கைதிகளைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வந்து திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகள் மீது அநாவசியமான நம்பிக்கையைக் காட்டி வருவதாக சில பத்திரிகையாளர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாஞ்சில்மனோகரன் மீண்டும் சேர்க்கப்பட மாட்டார்!

### தி.மு.க. செயற்குழு தீர்மானம்

சென்னை, ஜூலை 4.

தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டுள்ள அதன் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்.

தி.மு.க. செயற்குழு நேற்று சென்னையில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

வை. கோபாலசாமி எம்.பி. மற்றும் நான்கு மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆகியோர் கட்சிக் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி கூறியும் நடந்த சில சம்பவங்களுக்கு மன்னிப்புக் கோரியும் கடிதங்கள் அனுப்பியுள்ளனர் என்றும்—

அவற்றை செயற்குழு ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் திரு. கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா குடியேற்றத் திட்டம்: பரந்தனில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 4 பரந்தனில் உள்ள ஐந்தாம் வாய்க்கால் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டம் ஒன்று நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழவள், நேற்று மாலை 4.30 மணியளவில் புதிய குடியேற்றத் திட்டத்தை திறந்து வைத்தார்.

வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மனோ, தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். செல்வி நிருபாவின் தலைமையில் அங்கு நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பலரும் உரையாற்றினர்.

புதிய குடியேறறத் திட்டத்திற்கு ''பிரபா குடியேற்றத் திட்டம்'' எனப் பெயரிடப் பட்டுள்ளது. (இ-5)

# ராஜ்ய சபைக்கு தினேஷ்சிங்

புதுடில்லி, ஜுலை 4 இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரும், காங்கிரஸ் வேட்பாளருமான தினேஷ்சிங் ஹரியானாவில் இருந்து ராஜ்யசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று சண்டிகட்டில் இது குறித்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ராஜ்யசபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்ட இரண்டு சுயேச்சை வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப் பட்டதை அடுத்து, திரு. தினேஷ்சிங் மட்டுமே தேர்தல் களத்தில் வேட்பாளராக இருந்தார் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ)

# மேத்தாவை மத்திய அரசு நாடு கடத்தியிருக்க வேண்டும்

## காஞ்சி சுவாமிகள் கோருகிறார்

பம்பாய் பங்குச் சந்தையேர ஊழல் வெளியான போதே, அதன் சூத்திரதாரியான ஹர்ஷத் மேத்தாவைமத்திய அரசு நாடு கடத்தியிருக்கவேண்டும்.

இவ்வாறு காஞ்சி ஜெயேந்திரஸ்வாமிகள் தெரிவித்திருக்கிறார்.

மேத்தாவை நாடு கடத்த வேண்டும்என்றகோரிக்கையை ஆதரிப்பது நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொருகுடிமகனின் கடமையாகும் என்றும் அவர் கூறினார். (த-எ)

## ''சாத்தானின் கவிதைகள்''

# துருக்கி மொழி பெயர்ப்பாளர் தங்கியிருந்த விடுதிக்கு தீ!

## 35 பேர் கொல்லப்பட்டனர்

அங்காரா, ஜுலை 4 சர்ச்சைக்குரிய பிரபல எழுத்தாளர் சர்மான் ருஷ்டி எழுதிய ''சாத்தானின் கவிதைகள்'' நூலை மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட துருக்கி எழுத்தாளர் நெல்ஸின் என்பவர் தங்கியிருந்த விடுதி தாக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டதில் குறைந்தது 35 பொதுமக்கள் பலியானார்கள்.

துருக்கியில் நடந்த இந்தச் சம்பவத்திற்கு முஸ்லிம் அடிப்படைவாத கும்பல் ஒன்றே காரணம் என்று தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தில் மொழி பெயர்ப்பாளரான நெல்ஸின் (28 வயது) அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிவிட்டார்.

இதற்கிடையில்—

குர்திஷ் இனப்போராளிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில், 16 துருக்கிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ]

## இன்று

அரியாலை ஐக்கிய கழகத்தினர் மேற்கொண்டு வரும் சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சித்துப் பாத்தி மயானத்தை சிரமதானமூலம் துப்புரவு செய்யவுள்ளனர். (க-69)

o o o

மயிலணி, ஜுலை 4 ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் அத்துடன் விளையாட்டு போட்டிகளும் இடம் பெற உள்ளன. (இ-89)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று — பதினைந்து வயதுப் பிரிவில் — கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும்.

இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்து மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

o o o

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் டாக்டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக நடத்தும் கிரிக்கெட் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

### கிரிக்கெட்

காலை 8.30 மணி:- ஜுபிற்றர் 'பி' அணி எதிர் வாலையம்மன் 'பி' அணி

காலை 10.00 மணி:- களுவத்துறை வி. க. 'ஏ' அணி எதிர் யுத் வி. க 'பி' அணி

### கரப்பந்தாட்டம்

பிற்பகல் 2.30 மணி:- ஜுப்பிற்றர் வி. க. 'பி' அணி எதிர் மாதகல் பற்றிமா 'பி' அணி

மாலை 4.00 மணி:- கலைமதி வி. க. அணி எதிர் வை. எம். எச். 'ஏ' அணி

அரியாலை சனசமூக நிலையத்தின் 74 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டம் (''செட் அப்'') வலைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்று மாலை 6.30 மணி முதல் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய கழக 'ஏ' அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய கழக 'பி' அணி மோதும்.

கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதும். (உ-30)

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை இடம்பெறவிருக்கின்றன விவரம் வருமாறு:-

★ 3.30 மணி:- கொக்குவில் பொற்பதி அணி எதிர் புத்தூர் கலைமதி அணி

★ 4.30 மணி:- மயிலங்காடு ஞானகலா அணி எதிர் உரும்பராய் ஒஸ்கா அணி.

## யாழ். மாவட்டத்தில்

# ஒரு மாதத்திற்கு உணவு; கையிருப்பில் வைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் ஒரு மாதத்துக்குக் கூடுதலான காலத்துக்குப் போதுமான அத்தியாவசிய உணவுப் பொருள்களை மேலதிகமாகக் கையிருப்பில் வைத்திருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கை வனொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

5 ஆயிரத்து 670 மெட்ரிக் தொன் அரிசி, 4 ஆயிரத்து 620 மெட்ரிக் தொன் மா, 910 மெட்ரிக் தொன் சீனி ஆகியன நேற்று முன்தினம் வரை அங்கு கையிருப்பில் உள்ளன என்று அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் எம். ஐ. எம். ரபீக் தெரிவித்தார்.

3 லட்சத்து 18 ஆயிரத்து 600 பைக்கட் பால் மா, 32 லட்சம் சவர்க்காரக் கட்டிகள், 300 மெட்ரிக் தொன் தானியங்கள், 240 மெட்ரிக் தொன் ஏனைய உணவுப் பொருள்கள் ஆகியன மேலதிக கையிருப்பில் அடங்குகின்றன.

3 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கப்பல் மூலம் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.


## நன்றி

தவறவிடப்பட்ட எமது கைக்கடிகாரத்தை கண்டெடுத்து உதயன் பணிமனை மூலம் எனக்கு கிடைக்க உதவிய கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த

எஸ். நிரஞ்சனுக்கு

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கிறெகறி குடும்பத்தார்

கோண்டாவில்.

[26353]


# தீவக மக்களுக்கு மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜுலை 4 தீவக மக்களுக்கான 1993 மெய்வல்லுநர் போட்டி நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

இந்த கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் அனைத்தும் கலந்து கொள்ளுமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் கோரியுள்ளார். (இ)

# விஷமிகள் கல்வீச்சு!

யாழ்ப்பாணம், ஜுலை 4 யாழ். போதனா வைத்திய சாலை பெண்கள் சிகிச்சை வார்ட்டை நோக்கி நேற்று மாலை இனந்தெரியாத சிலரால் மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சினால் வார்ட்டின் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின.

கடந்த மூன்று நாட்களாக இப்படியான கல்வீச்சுச் சம்பவங்கள் இடம் பெறுவதாக சம்பந்தப்பட்ட வார்ட் உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது. [இ-15]

# கரும்புலிகள் தினம்...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

டங்களுக்கும் ஏற்பாடாகி உள்ளது.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் வீதிகள் யாவும் மஞ்சள், சிவப்பு நிறக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

பிரதான சந்திகளிலும், மைதானங்களிலும் பந்தல்கள் நிறுவப்பட்டு கரும்புலிகளின் திருவுருவப் படங்களை வைத்து அஞ்சலி செலுத்தப் படுகிறது

வீதிகளிலும் வாகனங்களிலும் கரும்புலிகள் தினத்தை ஒட்டிய பதாகைகள், சுவரொட்டிகள் என்பன காணப் படுகின்றன.

கரும்புலிகள் நாளை முன்னிட்டு, மக்கள் கரும்புலிகளை நினைவு கூரும் முகமாக சிற்றூர், வட்ட, கோட்ட ரீதியாக சிரமதான வேலைகளில் ஈடுபட்டு வருவதுடன் நாளைய தினம் கரும்புலிகளின் நினைவுத் தூபிகள், நினைவுருவப் படங்கள் அமைந்துள்ள இடங்களில் விளக்கேற்றி, மலர் வைத்து, அஞ்சலி செலுத்துவார்கள்.

மாணவர்கள், ஆசிரியர்கள், கொத்தணி மட்டத்தில் ஒன்று கூடி கரும்புலிகளை நினைவு கூர்ந்து கருத்துரைகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### மரியாதை செலுத்துவர்

பொதுஸ்தாபனங்கள், முக்கிய இடங்கள், இல்லங்கள் தோறும் படங்கள் வைக்கப்பட்டு மக்கள் மரியாதை செலுத்துவர்.

### வடமராட்சியில்

முதற் கரும்புலி கப்டன் மில்லர் அவர்கள் தாக்குதல் நடத்திய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் மாலை 7.05 மணிக்கு கரும்புலிகள் நினைவு நடுகல் திரை நீக்கமும், கரும்புலிகள் உருவப் படத் திறப்பு விழாவும் நடைபெறும் இறுதியில் மத்திய மகா வித்தியாலய அரங்க மைதானத்தில் பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

### தென்மராட்சியில்

தென்மராட்சியில் மீசாலை-கண்டி வீதி ஐயாகடைச் சந்தியில் நிறுவப்பட்ட கரும்புலிகளின் உருவப்படம் நாளை காலை 7.30 மணிக்குத் திரை நீக்கம் செய்து வைக்கப்படும். முதல் கரும்புலி வீரச்சாவடைந்த மாலை 7.05 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய அரங்க மைதானத்தில் பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

### வலிகாமம்

மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் மாலை 7.05 மணிக்கு பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இந் நிகழ்வுகளில் தமிழீழ மக்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதியும், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. ச. சிவாவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [அ-15-17]


# வேலை வாய்ப்பு வெற்றிடம்

பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து தொழில் வாய்ப்பற்றிருக்கும் கலை, வர்த்தக முகாமைத்துவ, விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, சுயவிவரங்களுடனான விண்ணப்பங்களை உங்கள் பகுதி மாணவர் அமைப்பு கோட்ட செயலகங்களில் 15.07.93 க்கு முன்னராக ஒப்படைக்கவும்.

பொறுப்பாளர்

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

(ஈ)


## மட்டு. அகதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளனர்.

மண்முனைவடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 13 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், கொக்குவில் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களும் மற்றும் சுத்தானந்தா முகாமும் முதலில் மூடப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது, [ஓ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு பிரேமாவின் ஆணை; அதன் உள்ளடக்கம் அந்தரங்கமானதா?

## அதனை மீளப்பெறாமல் அரசியல் தீர்வு என்று டி. பி. அரசு கூறுவது அபத்தம்!

**அரசியல்**

தமிழ் மக்கள் ஈழம் கேட்கிறார்கள். நாம் ஈழம் தர மாட்டோம். அது தவிர்ந்த வேறு எல்லாம் தருவோம்.

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசா இனப்பிரச்சினை குறித்து அடிக்கடி மாற்றி வந்த மேடை அலங்காரப் பேச்சுக்களில் இதுவும் ஒன்று.

ஆனால் அவர் தமிழர்களுக்கு ஒன்று கூடத் தராமல் போய்விட்டார். தான் ஒரு சனநாயகவாதி அல்லது சனநாயகப் பிரியன் அதனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்குத் தீவிர அக்கறை உண்டு என்று அவர் காட்டிக் கொண்டாரே தவிர, அதற்கான செயற்பாடு குறித்துச் சிந்தித்ததும் இல்லை. தமிழர்களுக்கு ஒன்றைக்கூடத் தருவதற்கு அவர் மனதாலும் முயலவில்லை என்பதே உண்மை.

அவர் இந்தியப் படையை வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேற்றுவதற்காகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு முன் வந்தார். இதுவே வெளியால் தென்பட்ட பொதுவான கருத்தாக இருந்தது ஆனால் தமிழர் மீதான யுத்தம் ஒன்றைத் தொடுப்பதற்கே அவர் திட்டமிட்டிருந்தார். அவ்வாறு யுத்தம் ஒன்றைத் தொடுக்கும்போது அதனைச் சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துவதற்கான முன்னேற்பாடாகவே அவர் அந்தப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தினார்.

விடுதலைப் புலிகளைச் சீண்டி தமிழர்கள் மீது யுத்தத்தை திணிக்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார். அதனால் தான் ஒரு முஸ்லிம் குடிமகனின் புகாரைப் பதிவு செய்ய மறுத்து அதனை யுத்தத்துக்கான ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டார்.

தமிழர் பிரச்சினையை சனநாயக வழியில் தீர்ப்பதில் பெருவிருப்பம் கொண்டவராக வெளியே காட்டிக் கொண்டு, தமிழர்கள் மீது இராணுவ ஆட்சியைக் கட்டவிழ்த்து, அவர்களின் உரிமைப் போரை முறியடிப்பதே அவரது முழு நோக்கமாகவும் இருந்தது. அதனாலேயே அவர் வடக்கு-கிழக்கில் யுத்தத்தைப் பிரகடனம் செய்வதற்கு முன்னர் இராணுவத்துக்கு — கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு — ஆணை (Mandate) ஒன்றை வழங்கியிருந்தார். அதற்கான ஆணைப்பத்திரத்தில் (writ) அவர் கையொப்பம் இட்டு வழங்கியிருந்தார் என்று கொழும்பு அரசியல் — இராணுவ — அந்தரங்க வட்டாரங்களில் அப்போது பேசப்பட்டது.

ஆனால் அந்த ஆணைப் பத்திரத்தின் பொருளடக்கம் என்ன, இராணுவத்துக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து எவரும் இது வரை வினா எழுப்பவில்லை. தமிழர் விவகாரம் ஆதலால் சிங்கள எதிர்க்கட்சிகள் அது குறித்து அக்கறைப்படவில்லை; அக்கறை கொள்ளவும் மாட்டா. அமைச்சர் தொண்டமான் உட்பட தமிழர் கட்சிகள் என்று கூறிக் கொண்டு கொழும்பில் வாசம் செய்யும் ஏனையோரும் இராணுவத்துக்கு பிரேமதாசா வழங்கிய ஆணையின் உள்ளடக்கம் என்ன என்பதைக் கேட்கத் துணியவில்லை!

வடக்கு-கிழக்குச் சம்பந்தமாக இராணுவத்துக்கு பிரேமதாசா வழங்கிய ஆணையின் விவரம் அவருக்கும், ரஞ்சன் விஜேரத்தினாவுக்கும், இராணுவ உயர் தலைவர்களுக்கும் மட்டுமே தெரிந்த அந்தரங்க விடயமாக இதுவரை இருந்து வருகிறது. புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுக்கேனும் அது தெரிந்திருக்குமா என்பது சந்தேகத்துக்கு உரியதே!

அந்த ஆணைப்பத்திரத்தின் உள்ளடக்கம் தெரிந்திருந்தால், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த யுத்தக் கைதிகளை மீட்கும் விடயத்தை அரசு வேறுவிதமாக கையாளத் திட்டமிட்டிருக்க வாய்ப்பு இருந்திருக்கும்.

வடக்கு - கிழக்குச் சம்பந்தமாக அரசு எடுக்கும் எந்த முடிவும் தமக்குச் சாதகமாக இல்லாதிருந்தால் அல்லது தாம் விரும்பாதிருந்தால் அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதே கடந்த மூன்று வருடங்களாக இராணுவம் கடைப்பிடித்துவரும் நடைமுறையாகும். யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்குப் பதிலாக பொருளாதாரத் தடையை நீக்குவது என்ற இணக்கத்தை அரசு உடைத்துக் கொள்வதற்கும் இராணுவம் வசம் உள்ள ஆணையும் அதன் வழி எழுந்த மேலாண்மை வளர்ச்சியுமே காரணங்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இராணுவத்துக்கு பிரேமதாசா வழங்கிய ஆணையில் வடக்கு - கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பை மட்டுமன்றி, தமிழர் பிரதேசத்தின் நிர்வாகப் பொறுப்பையும் ஒப்படைத்திருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது!

### பாவனைப் பொருள்களை இராணுவம் தடுத்தது எப்படி?

இராணுவ நடவடிக்கைகளால் தமிழர்களின் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்று கண்ட பின்னர், தமிழர் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் முடிவை இராணுவமே செய்தது. அரசாங்கம் அல்ல. அதற்கான சாட்சிப் பத்திரம் பகிரங்கமானது.

வடக்கு - கிழக்குக்கு எடுத்து வரத் தடை விதிக்கப்பட்ட பொருள்களை அறிவித்தவர் நிதி அமைச்சரோ, வர்த்தக அமைச்சரோ அல்லது அவர்களது செயலாளர்களோ அல்லர். 1991ஆம்ஆண்டு ஆகஸ்ட் 9இல் வெளியிடப்பட்ட அது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவே ஒப்பமிட்டிருக்கிறார்!

மொத்தமுள்ள 47 பொருள்களில் ஆகக்கூடியது ஏழு வகைகள் மட்டுமே யுத்தத்துடன் தொடர்புடையவை. ஏனையவை மக்களின் நாளாந்த உணவு மற்றும் பாவனைப் பொருள்கள். மக்களின் நாளாந்த பாவனைப்பொருள்களை எடுத்து வருவதை தடை செய்யும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சையே சார்ந்திருந்தது என்றால், இராணுவத்திடம் வெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மட்டுமன்றி ஏனைய சிவில் நிர்வாகப் பொறுப்புகளும் அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்த ஆணையின் காரணமாகவே, வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரையில் எந்தவித முடிவையும் அரசாங்கம் தனித்துச் செய்ய இயலாத தன்மை தோன்றி இருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது வெறும் பேச்சளவிலேயே இருப்பதற்கும் சம்பந்தப்பட்ட ஆணைப் பத்திரமே காரணம்!

வடக்கு-கிழக்கு விவகாரங்களில் இராணுவம் ஒரு நிழல் அரசாங்கமாகவும், மாற்று அரசாங்கமாகவும் மாறுவதற்கும், மேலோங்குவதற்கும் வித்திட்டதும் பிரேமதாசாவின் ஆணையே எனலாம். கடந்த மூன்று வருடங்களிலும் வடக்கு-கிழக்கு சம்பந்தமான அலுவல்களில் இராணுவம் அரசாங்கத்திடம் ஆலோசனை கலக்கிறது என்பதனை விட தானே சகல முடிவுகளையும் எடுக்கின்றது.

ஒரு சிறிய உதாரணம். கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற பேச்சு வந்தது. அங்கே தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை உண்டா என்று தேர்தல் ஆணையாளரிடம் கேட்டபோது, இராணுவத்திடம் கேட்ட பின்னர் தான் கருத்துக் கூற முடியும் என்று நாடாளுமன்றத்துக்கும் மேலான சுய அதிகாரம் உள்ள சந்திரானந்தா டி சில்வா தெரிவித்தார்! இது எதனைக் காட்டுகிறது? அரசாங்கமோ அதன் அதிகாரிகளோ வடக்கு-கிழக்கில் எதனைச் செய்வதானாலும் இராணுவத்தின் ஆலோசனைப் பிரகாரம் அல்லது அதன் அனுமதி பெற்றே செய்யவேண்டிய நிலை உருவாகி இருக்கிறது என்பதேயாம்!

ஆகையால் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று வெளியே பேசிக் கொள்வது அர்த்தமற்றது. இராணுவத்துக்கு பிரேமதாசா வழங்கிய ஆணை மீளப் பெறப்படும் வரை விஜேதுங்காவோ வேறு எவருமோ உள்ளார்த்தமாக அரசியல் தீர்வையே விரும்பிடினும் (அதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவு) அவர்களால் இயலாது.

எனவே தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் எதுவும் பயன் தரும் என்று நம்புவதற்கில்லை அவற்றில் காலம் கழிப்பதும் வீண்.

வடக்கு-கிழக்கில் இராணுவ ஆட்சிக்கு உத்தரவிட்ட கொழும்பு அரசுக்கு, அதனை ஒரு சனநாயக அரசு என்று கருதி நிதி உதவியும் மற்றும் சகலவித உதவிகளையும் வழங்கும் உலக நாடுகள் தாம் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றன என்பதனை இனியாவது உணர வேண்டும்.

இராணுவத்துக்கு பிரேமதாசா வழங்கிய ஆணை என்ன? அதன் உள்ளடக்கம் என்ன என்பதனை வெளியிடுமாறு உலக நாடுகள் கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் வடக்கு-கிழக்கில் போர் நீடிக்கவே செய்யும். தமிழர்களை இனச் சுத்திகரிப்புச் செய்யும் தனது இலக்கை நோக்கி இராணுவம் நகரவே முயலும். உலக நாடுகள் தாமும் அதற்கு உடந்தையாக இருக்கப் போகின்றனவா? வடக்கு-கிழக்கில் அதிகாரம் இல்லாத கொழும்பு அரசு கூறிவரும் அரசியல் தீர்வு என்ற போர்வையை நம்பப் போகின்றனவா?

இராணுவத்துக்கு வழங்கப்பட்ட ஆணையை மீளப் பெறாவிடில், அல்லது அந்த உரிமையை அழிக்காமல் பேச்சுவார்த்தை நடத்துவதானால் இராணுவத்துடன் தான் பேச வேண்டும். இராணுவத்துடன் பேச்சு என்பது சரணாகதிக்கு அத்திவாரமாகவே அமையும்! ★

— உதயகாந்தன் —




## மயான அபிவிருத்தி

உடுவில், ஜூலை 4

மானிப்பாய் பிப்பிலி மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை முடிவு செய்துள்ளது.

இம் மயானத்தை திருத்தம் செய்யவும் அபிவிருத்தி செய்யவும் என ஐம்பதாயிரம் ரூபாவை இவ் வருட மூலதன அபிவிருத்தி நிதியில் இருந்து பிரதேச சபை ஒதுக்கி உள்ளது. (த-152)

## புள்ளிவிவரஇயலாளர் பரீட்சை 24இல்

கொழும்பு, ஜூலை, 4

குடிசனமதிப்பு, புள்ளிவிவர திணைக்களம் நடத்தும் புள்ளி விவர இயலாளர் பதவிக்கு ஆட்களை திரட்டுவதற்கான பொதுப் பரீட்சை எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## குருதேவர் புண்ணிய திதி

குருதேவர் சுவாமி சிவானந்த சரஸ்வதி மகாசமாதி அடைந்த 30 ஆவது புண்ணிய திதி எதிர்வரும் 13ஆம் திகதி யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி வரையான பத்து நாட்கள் (மாலை 4 மணி முதல் 6மணி வரை) சாதனா நாட்களாக அனுஷ்டிக்கப்படும். (க)

## இடம்பெயர் சேவை

எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் ஜனாதிபதி இடம்பெயர் சேவை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் இடம்பெறவுள்ள முதலாவது இடம்பெயர் சேவை இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## சீனி விநியோகம்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் உலர் உணவு அட்டைக்கு 2 கிலோ சீனி கிலோ ரூபா 27.80 சதம் வீதம் விநியோகிக்கப்படுகின்றது அத்துடன் உணவு முத்திரைக்கு அரிசி, மா ஆகியவையும் விநியோகிக்கப்படுகின்றன. (த-89)

## படுகாயம்

மதிலுடன் சேர்ந்து இடிந்து விழுந்த இரும்பு கேற்றினுள் அகப்பட்டு வயோதிபப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொக்குவில் மேற்கு காளி கோவிலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆறுமுகம் சின்னத்தங்கச்சி (வயது 85) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

இரவு வீசிய கடுங்காற்றினால் கேற் மதில் அருகில் இருந்த மரம் முறிந்து மதில் மேல் விழுந்த போதே மதில் இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-15)

## சடலம் ஒப்படைப்பு

வீட்டின் உள்ளே அனாதரவான நிலையில் இறந்து கிடந்ததாக ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மாலை யாழ். ஆஸ்பத்திரியில் காவல் துறையினரால் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் தொண்டைப் பகுதியில் தாடைக்குக் கீழாக கத்திக்குத்து அடையாளம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் அராலி வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கே. கந்தையா (வயது 50) என்பவரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவார். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிச் சுற்றாடலில் வீடு விற்பனைக்கு உண்டு. பொ. காங்கேயன், சட்டத்தரணி. [26282]

இந்திய நாவல்கள், சொற் களஞ்சிய அகராதி (மெட்ராஸ் யுனிவெசிற்றி) ஆகியன தொகையாக விற்பனையாகின்றன. நூல்நிலையங்களும், பாடசாலைகளும் உடன் தொடர்புகொள்ளவும்! மகிமிலன் புத்தகசாலை, 3 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-5349)

இரண்டு அலுமாரிகள். ஒன்றில் ஒரு கதவு முழுக்கண்ணாடி மற்றது சகல பாவனைகளுக்கும் ஏற்றது. கட்டில் நியாயமான விலை. சக்தி, 387 A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதிக்கு முன்பாக) (26347)

### வெளிவந்துவிட்டது

வரதர் கதைமலர்-1 அனுவை நாகராஜன் எழுதிய 'அவன் பெரியவன்' சிறுவர்க்கான சுவையான கதைநூல் வெளிவந்துவிட்டது. ரூபா 12/-. விற்பனையாளருக்கு கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி/5351)

### நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணி அம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5327)

### கைச்சங்கிலி யாருடையது?

காங்கேசன்துறை வீதியில் இருந்து ஒரு கைச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சி. கண்ணன், இல: 83, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (26329)

### இலவச திருமண சேவை

33 வயது, திருவாதிரை, 12இல் செவ்வாயும், சூரியனும் உடையவர். சுவிஸில் இருந்து விசாவுடன் யாழ். வந்துள்ளார். தகுந்த மணமகள் தேவை. பெண்ணை அழைத்துச் செல்லலாம். த. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (26314)

### மணமகள் தேவை

இந்து மதம், சுத்த சைவ போசனமும், பொருளாதாரமும், பல தொழிற்பயிற்சிகள் பெற்று, பெரிய தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்பவருக்கு; ஓர் ஆசிரியர் 29 வயதுக்குட்பட்ட மருமகளைத் தேடுகின்றார். தொழில் புரியும் பெண்ணானால் சீதனம் பெரும் பிரச்சினையாகாது இல. 15, மே/பா உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5979)

### புலமைப்பரிசில்

பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். Bond, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S, K. சாமி நெல்லியடி, பளிங்கு சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (26339)

### கல்வி

G. C. E. [O/L]இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவமுடைய ஆசிரியரினால் நாற்பது மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஜோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (26348)

---

வெளிவந்து விற்பனையாகின்றன

## அஸ்ரன் வெளியீடுகள்

★ G. C. E. O/L 5 வருட கடந்தகால வினாக்களும் - விடைகளும். (எல்லாப் பாடங்களும)

★ G. C. E. A/L 10 வருட வினா-விடைகள். (10 பாடங்கள்)

★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 7 வருட வினா - விடைகள்.

★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 50 பயிற்சிகள் கணிதம், தமிழ்.

யாழ். நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகப் பெற:

**அஸ்ரன் பதிப்பகம்,**

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி 5355]

---

உ
விநாயகர் துணை

## திருமண வாழ்த்து

**சிவகாந்தன் தேவகிதேவி**

பாரி போற்றும் பண்புடையான் யாழ் ஏந்து திருநெல்வேலிச்
சீர் பெறு சிவகாந்தன் தன்னை
ஏர் ஏத்தும் எழிலுறு துணுக்காய் நங்கை நல்லாள்
நற் தேவகி தேவிக்கு
ஊர் ஏத்தியுவகை கொள்ள லண்டன் மாநகரதனில்
ஸ்ரீ முருகன் அருள் சிறப்புறு சந்நிதியில்
சேர் பெரியோர் புடைசூழச் சித்தமது களி கூர
சீர் பத்தாம் திங்கள் இன்றதனிலிறை யருளால்
இணைத்து வைத்தாரிணையற்ற பெரியோர்கள்
திருமணம் எனும் தீந்தமிழ்ச் சோலை தன்னில்

— நிறைவுடன் வாழ்க மணமக்கள் —

திரு. திருமதி பொன்னம்பலம்,
(ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்)
ஆடியபாதம் வீதி, கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

திருமதி சௌபாக்கியலக்ஷ்மி குலசேகரம்,
''தர்க்காஸ்தான்'' துணுக்காய்,
திரு. திருமதி தங்கராஜா,
திரு. இ. தம்பிராஜாவும்,
(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி-முகாமையாளர்)
திருமதி தம்பிராஜாவும்,
151, நாவலர் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(26318)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 10 — 07 — 1922 | 04 — 06 — 1993 |

**அமரர் சரவணமுத்து சதாசிவம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அன்பெனும் அமுதூட்டி, பண்பெனும் பாசமூட்டி, அன்பு மருமக்களை அரவணைத்து ஆளாக்கிய எமது அன்புத் தெய்வமே! நீங்கள் காட்டிய பாதையில் நடக்கின்றோம் மாமா! உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.


அன்புச் சகோதரி, சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(6300)

---

## முதலாம் ஆண்டு அஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 09 — 1931 | 15 — 07 — 1992 |

அமரர்
**வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**
(முன்னாள் தொழில் அதிபரும், அகில இலங்கை-இந்து மாமன்றத் தலைவரும்)

திதி: 04 — 07 — 1993

தரவை பெற்றெடுத்த தனயனே!
அனைத்திலங்கை இந்து மன்றத் தலைவனாய்,
இராசாவாய், டாக்டராய்,
எல்லோருக்கும் 'பாலா' வாய் நின்று
அள்ளிக் கொடுத்த அண்ணலே - உன்
குலம் செழிக்க வைத்த கோமகனே!
நீ மறைந்து ஆண்டொன்றானாலும்! ஆறவில்லை-
நம் துயரம்!

கொழும்பு வாழ் கொடை வள்ளலே!
நீ, வாரி வழங்கி வளர்த்து விட்ட எத்தனை
கோயில்கள், கோபுரங்கள்,
'கோபா மில்ஸ்' சேர்ந்த பல பணிமனைகள்
பாடசாலைகள், பண்பாட்டு நிலையங்கள்
விஞ்ஞான கூடங்கள், விளையாட்டுக் கழகங்கள்,
தண்ணீர்த் தாங்கிகள், தர்மசாலைகள்
அத்தனையும் நின்பதம் நின்றேத்த
அடையாதோ நின் ஆத்மா சாந்தி!

- குடும்பத்தினர்.

இல. 32, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-5430)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண் 8/-

மாவின் விலை அரசாங்கத்தால் இலோவுக்கு 1-35 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணத்தால், பாண் ஒன்றின் விலை 50/- சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதனை பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம். பாணின் விலை, நிறை, தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்.

ந. பாலவினாயகர்,
மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்,
மணியம்ஸ் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (26349


### உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கமைய

# பல்கலைக்கழக அனுமதி;
# மாணவர் மத்தியில் அதிருப்தி

1990 / 91 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கமைய சகல துறைகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் கிடைக்காததையிட்டு மாணவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கூடவிருக்கின்றனர்.

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, பாதிக்கப்பட்ட பொறியியல்துறை மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏனைய துறை மாணவர்கள் குறித்து எதுவித முடிவையும் இதுவரை அறிவிக்கவில்லை. (த-3,

## ஆலயங்களில்......

புலோலி அருள்மிகு புற்றளைச் சித்தி விநாயகராலய பூங்காவனத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க)

o o o

கொக்குவில்-நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பூங்காவனத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

இத் திருவிழாவில் மேளக் கச்சேரிகள், இசைக் கச்சேரி, ராஜன்ஸ் குழுவினரின் மெல்லிசை ஆகியன இடம்பெறும். (க)

o o o

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சிவபெருமானின் கும்பாபிஷேக தினமும் சங்காபிஷேகமும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

o o o

உடுப்பிட்டி சந்திர சேகர வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த உற்சவ அபிஷேக நிறைவு விழா இன்று ஞாயிறு நடைபெறும். (த-11)

o o o

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் தினமும் கம்பராமாயணம் பற்றிய இலக்கியப் பேருரையைக் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. த. சிவகுமாரன் நிகழ்த்துவார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரையும் எதிர் வரும் 15 ஆம் திகதி வரையுமான அடுத்துவரும் நாட்களில் மாலை 6மணி முதல் 7மணி வரையும் இச்சொற்பொழிவுகள் நடைபெறும்.


## உதவித் தாதியர் பயிற்சி
(DIPLOMA IN NURSING - AID)

28 — 08 — 1993 இல் ஆரம்பமாகின்றது.

விவரங்களுக்கு:

சாயி மெடிக்கல் அக்கடமி,
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்க்கு இலவச பயிற்சி)
(சி-5344)


## கருத்தரங்கு

விடயம்: சித்த மருத்துவ வளர்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையின் பங்களிப்பு

காலம்: 10 - 07 - 1993 சனிக்கிழமை காலை 9 - 00 மணி

இடம்: யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை, கைதடி

இதில் சகல பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களையும், சித்த மருத்துவ பட்டதாரிகளையும், சித்த மருத்துவ அபிமானிகளையும், சித்தமருத்துவம் பற்றி தவறான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளவர்களையும், உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பரப்புபவர்களையும் தவறாது சமுகம் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். இதன் மூலம் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கலாம்.

-சித்த மருத்துவ மாணவர் மன்றம்.

(26344)

## கேள்வி அறிவித்தல்

**கல்வித் திணைக்களம்**
யாழ்ப்பாணம்.

யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்திற்கு தேவையான தளபாடங்கள்

## வழங்கலும் விநியோகித்தலும்

மேற்படி தளபாடங்கள் வழங்கலும், விநியோகித்தலுக்குமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 07 - 07 - 1993 ஆம் திகதி காலை 10-00 மணி வரை பிற்போடப்பட்டுள்ளது. கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும்.

பிரதேச கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 02-07-1993. (சி 5428)

## அறிவித்தல்

### 1991 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ.
(உயர்தரம்)
### விசேட பரீட்சை

மேற்படி பரீட்சையினால் பாதிப்படைந்த சகல மாணவ மாணவிகளையும் (பொறியியற்பிரிவு தவிர்ந்த) பெற்றோர்களையும் 1993-07-06ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மூகாமைத்துவ மண்டபத்தில் ஒன்று கூடும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இணைப்பாளர்,
நடவடிக்கைக் குழுவின் சார்பில்.

யாழ். இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்,
1993-07-02 (சி-5432)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்

கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 15-07-1993 தொடக்கம் 31-12-1993 வரைக்குமான காலப்பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் 12-07-1993ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் 13-07-1993ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் முற்பகல் 11-00 மணிக்குத் திறக்கப்படும்.

| குத்தகையின் பெயர் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | — | 25-00 | 100-00 | 40,000-00 |
| 2. உடுவில் ஆலடி மாட்டிறைச்சிக்கடை | — | 25-00 | 100-00 | 35,000-00 |
| 3. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக்கடை | — | 25-00 | 100-00 | 17,000-00 |
| 4. சுன்னாகம் மத்திய சந்தை கருவாட்டுக்கடை இல. 1 | 60-00 | 15-00 | 100-00 | 1,000-00 |
| 5. கருவாட்டுக்கடை இல. 3 | 60-00 | 15-00 | 100-00 | 1,000-00 |
| 6. கருவாட்டுக்கடை இல. 7 | 60-00 | 15-00 | 100-00 | 1,000-00 |

தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 30-06-1993 (சி-2017)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 08 — 1972
மறைவு: 28 — 06 — 1991

செல்வன்
**சுப்பிரமணியம் பத்மகிரிதரன் (கிரி)**

திதி: 04-07-1993

பாலகனே பத்ம கிரிதரனே பாரினிலே
பாவி நாம் ஆவி துடிக்கின்றோம்
கண்ணுள் நீ கண்மணியாய் இருப்பதால்
கண்ணீரும் கசிய மறுக்கிறது என் செய்வோம்
எண்ணி நெஞ்சம் ஏங்குகின்றோம்
மண்ணில் நாம் மகனே காண்பதெப்போ
அன்பும் பரிவும் அறமும் பண்பும்
என்றும் நிறைந்த ஏந்தலே எங்கள் மகனே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


உமது பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணன்மார், தம்பி.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (26346) தகவல்: அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

04 — 07 — 1993



தோற்றம்: 01 — 01 — 1907

மறைவு: 04 — 06 — 1993

### திருமதி இரத்தினம் சின்னத்தம்பி

(முன்னாள் தலைமை ஆசிரியை)

அம்மா உன்றன்
வெள்ளை உள்ளமும் மேனியும் போலவே
நீ வெள்ளைத் துகில் உடுத்தி
வேறொன்றும் கருதாமல் உன்
பிள்ளைகளைப் பெருமையாய் வளர்த்திட்டாய்,
அம்மா உன்றன்
கற்ற பரம்பரையைக் காத்தே என்றும்
நீ, கல்வியே கண்ணும் கருத்தனுமாகக்
காலமெல்லாம் கற்பித்தாய் அனைவர்க்கும்
பெற்ற பிள்ளைகள் நாம் நின்றேங்கப்
பேரொளியிற் கலந்தே அடைந்தாயோ.

சாந்தி!

- குடும்பத்தினர்.

32, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-5429)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### ஞானரஞ்சிதம் புவனகாந்தன்

தோற்றம்: 10 — 08 — 1959

மறைவு: 15 — 06 — 1992

திதி: 04 — 07 — 1993

எங்கள் திருவிளக்கே! எழில் மயிலே ரஞ்சிதமே!
திங்கள் முகம் மறைத்தே பேபி நீ சென்றனையோ
கங்குல் பகலெங்கண் காட்சி மறப்பதில்லை.
நங்குலத்து நாயகியே ஞானமே கொள் சாந்தி.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

— குடும்பத்தினர்.

பிரதான வீதி,
காளுவன்,
சுழிபுரம்.

(26337)

## கதிர்காம உற்சவம்

கொழும்பு, ஜூலை 4

கதிர்காம உற்சவம் இம் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 3ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இதனை ஒட்டி கதிர்காமத்தில் பாதுகாப்புநடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கு அதிகமான பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவர். ரோந்து கார்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பொலீஸார் பயன்படுத்துவர். [த-எ]

## பாடசாலைகளில்

ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலைகளின் இரண்டாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர விளையாட்டு அரங்கில் தலைமை ஆசிரியை திருமதி சாந்தினி திருச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி எஸ். கிருஷ்ணதாஸும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ். மத்திய சிற்றூரவைப் பொறுப்பாளர் திரு. பிரசாத்தும் கலந்து கொள்வர். (த)

o o o

ஆவரங்கால் மத்திய பாலர் பாடசாலையின் 18 ஆவது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மேஜர் அல்பேட் கலையரங்கு முன்றலில் நடைபெறும்.

செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி செ. ஜெனனி பிரதம விருந்தினராகவும், மகளிர் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி க. மாலினி, வலி. கிழக்கு உள்ளூராட்சி விசேட ஆணையாளர் திருமதி கி. பாஸ்கரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (க)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

இருபாலை ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்திய கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்,

மேற்படி ஆலய பிரதம சிவாச்சாரியார் பிரணவதார்த்தி ஹரக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற கம்பராமாயண தொடர் இசைச் சொற்பொழிவின் பூர்த்தி விழாவின் போது பல்கலைக்கழக இந்து நாகரிகப் பீடத் தலைவர் டாக்டர் பிரம்மஸ்ரீ கோபால கிருஷ்ணன் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவித்தார். (த)

## பொது விரிவுரை தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ஈழத் தமிழ் வரலாறு எனும் பொதுத் தலைப்பில் பொதுவிரிவுரை தொடர் ஒன்று இம் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது. பிரதி சனிக்கிழமை தோறும் இரு விரிவுரைகள் என்ற அடிப்படையில் காலை 9 மணி முதல் 12 மணிவரை கைலாசபதி கலையரங்கில் மேற்படி விரிவுரைத்தொடர் நடைபெறும். (ப)

விண்ணக வாழ்வின்

## 31ஆம் நாள் நினைவு

திருமதி

### இந்திராணி றோஸ் இம்மானுவல்

இல. 16, மவுண் காமல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி இந்திராணி இம்மானுவல் 06-06-93 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் 06 - 07 - 93 செவ்வாய்க்கிழமை காலை 6 - 00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் உற்றார், உறவினர் மற்றும் யாவரையும் பங்குபற்றி, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்.

இல. 16, மவுண்காமல் வீதி,
யாழ்ப்பாணம்.

(26816)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 12 — 07 — 1938

இறைவன் அடியில்: 04 — 07 — 1991

### அமரர் இராசையா தங்கராசா

திதி: 10 - 07 - 1993

அன்பான அப்பாவே!
இரண்டாண்டு சென்றாலும்,
எம் துன்பம் ஆறாது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள்.

192, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(26311)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06 — 04 — 1930

மறைவு: 15 — 07 — 1992

அமரர்

### தம்பு கோபாலசிங்கம்

[முன்னாள் ராஜ்கோபால்ஸ் பங்காளர்]

திதி: 04 — 07 — 1993

அன்பின் திருவுருவாய் வாழ்ந்து, எங்கள் எல்லோரினதும் உள்ளங்களில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்,
ஊழியர்.

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[26317]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சமூகப் பணியே சமயப் பணி

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினொராவது ஆண்டு பரிசளிப்பு விழா இன்று நடைபெறுகிறது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆயயத்தினரால் இந்த மகளிர் இல்லம் கடந்த 11 வருடங்களாக மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த முன்னுதாரணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இன்று உருவாகியுள்ளது. அது இன்றைய சூழ்நிலையில் காலத்தின் தேவையுமாகும்.

ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்பது சைவ சமயம். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உயரிய கோட்பாட்டுக்கு அமைய தொண்டியற்றியவர்கள் சைவ சமய குரவர்களும் நாயன்மார்களும்.

மேலும் ஆலயங்களே சமூக வளர்ச்சியின் நடு நிலையங்களாக விளங்கிய மரபுகள் எமது பண்டைய விழுமியங்கள். ஆலயங்களைச் சூழவே கல்விக் கூடங்கள், கலைக் கூடங்கள், அன்ன சத்திரங்கள், தர்ம சாலைகள் நிறுவப்பட்டு சமூகப் பணிகள் சிறப்பாக நடந்த பாரம்பரியம் சைவ சமயத்தவருக்கு உண்டு.

ஆனால் இப்போது அந்தப் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் மறந்தவர்களாக யாழ்ப்பாணத்துச் சைவ சமூகம் வாழ்ந்து வருவது கவலைக்குரியதாகும்.

ஆலயங்கள் ஆன்மீக வாழ்வுக்கும், அருள் நெறிக்கும் வித்திடும் கோவில்களாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. அவை சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டும். சமூகத் தொண்டு சமயத் தொண்டின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக வேண்டும்.

ஆனால் இங்கோ யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ ...? வருவாய்க்குச் சண்டை இடும் இடங்களாகவும், அவரவர் புகழ்தேடும் நிலையங்களாகவும் ஆலயங்கள் மாறி வருகின்றன, ஆலயங்களின் நிர்வாகத்துக்கும், பரிபாலனத்துக்கும் நடக்கும் உரிமைப் போட்டிகளும், பூசல்களும் வேறெதனை விளம்புகின்றன?

இந்த நிலை அடியோடு மாற வேண்டும். ஆலயங்களில் அடியவர்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியேனும் சமூகப்பணிக்காக ஒதுக்கப்பட்வேண்டும். வாழ்க்கையில் அநாதரவாகிவிட்டவர்கள் எண்ணிக்கை வேறெந்தக் காலத்தையும் விட இப்போது அதிகம். எனவே அவர்களுக்கு வாழ்வளிக்கும் பணிகளுக்கு ஆலய வருவாயில் ஒரு பகுதியாவது ஒதுக்கப்பட வேண்டும்.

ஆலயங்கள் அநாதை இல்லங்கள், ஊனமுற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்றவற்றையும் கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றையும் ஆரம்பித்து நடத்தவேண்டும். ஊரில் உள்ள ஓர் ஆலய வருவாயில் செய்யமுடியவில்லை என்றால் பத்துக் கோவில் நிர்வாகங்கள் சேர்ந்தால் ஒரு அநாதை விடுதியை நடத்தமுடியாதா? ஆண்டவனுக்கு அடியவன் தரும் பணம் அவனது பிள்ளைகளான ஏழைகளுக்கும், வசதி குறைந்தவர்களுக்குமே சேரவேண்டும். வசதி நிறைந்த தனிப்பட்டவர்களுக்கு அல்ல.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலையும், அதன் நிர்வாகி பெருமாட்டி தங்கம்மா அப்பாக்குட்டியையும் குடாநாட்டில் உள்ள ஆலயநிர்வாகிகளும் முன்னுதாரணமாகக் கொள்ளட்டும். ஆலய வருவாயை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் புதிய சிந்தனையும் நன்னோக்கமும் பரந்த நோக்கும் பிறக்கட்டும்!

# 230க்கும் மேற்பட்ட கத்தோலிக்க யாத்திரிகர்கள் நீரில் மூழ்கி மரணம்

## பிலிப்பீன்ஸ் சிலுவைப் பெருநாளில் படகு விபத்து

மணிலா, ஜூலை 4

பிலிப்பீன்ஸ் நாட்டில் பாரம்பரிய கத்தோலிக்க விழாவான சிலுவைப் பெருநாளின் போது ஆற்றில் சென்ற ஸ்தூபி வடிவினைக் கொண்ட வள்ளம் நீரினுள் மூழ்கிய போது 230க்கும் அதிகமான யாத்திரிகர்கள் இறந்து விட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

மூன்று வள்ளங்களை ஒன்றாக இணைத்து ஸ்தூபி வடிவ அமைப்பினைக் கொண்டதாக இருந்த இந்த வள்ளம் நேற்று முன்தினம் மாலை உடைந்து நீரில் மூழ்கியது.

தலைநகர் மணிலாவுக்கு வடக்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆற்றில் இந்த விபத்து ஏற்பட்டது.

211 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆற்றின் சேற்றுக்குள்ளிருந்து மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 4 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களாக இருந்தனர்.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்தூபியின் முனையில் பொருத்தப்பட்டிருந்த 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சிலுவையும் ஆற்றில் விழுந்து காணாமல் போய் விட்டது. (இ-க)

## நாட்டிலுள்ள பல்கலைக்கழக தரம் உயரும்

கொழும்பு, ஜூலை 4

நாட்டிலுள்ள ஒன்பது பல்கலைக்கழகங்களும் எதிர்காலத்தில் ஆராய்ச்சி மற்றும் எம். ஏ. பட்டங்களை மட்டும் வழங்கும் நிலைக்கு உயர்த்தப்படவேண்டும்.

இதற்கேற்ப நீண்ட காலத்திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று உலக வங்கி இலங்கை அரசுக்கு சிபார்சு செய்துள்ளது.

இதேவேளை—

இணைந்த பல்கலைக்கழகங்கள் பொதுப்பட்டங்களை வழங்க வேண்டும் என்றும் உலக வங்கி தனது சிபார்சில் தெரிவித்துள்ளது. (த-எ)

தடை செய்யாமல் விட்டிருந்தால்

## புலிகளினால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமாம்!

### மத்திய அமைச்சர் சொல்கிறார்

புதுடில்லி, ஜூலை 4

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்து அதன் நடமாட்டத்தைத் தமிழகத்தில் கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்காது இருந்திருப்பின் அது நாட்டிற்கே பேராபத்தை கொண்டு வந்திருக்கும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் முன் கண்டவாறு தெரிவித்தார்.

உள்துறை அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் சிறை வைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் சிலர் தப்பிச் சென்றதைக் கவனிக்கும்போது அது தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் மீண்டும் ஊடுருவியுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (த-எ)

## பொதுநலவாய நாடுகளுக்கிடையில் குற்றவாளிகள் பரிமாற்றம்; நகல் சட்டமூலம் அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 4

பொதுநலவாய நாடுகளுக்கிடையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் பரிமாறிக் கொள்ளும் நகல் சட்டமூலத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நீதி அமைச்சர் சாகுல் ஹமீதுவின் சிபாரிசை அடுத்து இந்த நகல் சட்டத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹெரத் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தின் படி இலங்கையில், குற்றம் புரிந்த பொதுநலவாய நாடு ஒன்றின் பிரஜை ஒருவர் சம்பந்தப்பட்ட நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார் இதே போன்று பொதுநலவாய நாடு ஒன்றில் குற்றம் புரிந்த இலங்கைப் பிரஜை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவைப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

## காஞ்சிமுனிவர் உபதேசம் அருமருந்தான அமுதமொழி

### நூற்றாண்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 4

''காஞ்சிமா முனிவரின் உபதேசங்கள் மக்களின் ஆன்மீக வாழ்விற்கு அருமருந்தான அமுதமொழிகளாகும். நாளாந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தகுந்த சுவாமிகளது உபதேசங்கள் மனிதனை ஆன்மீக நெறியினுள் அழைத்துச் சென்று மனித ஈடேற்றத்தின் உயர் நிலையைக் காட்டி நிற்கின்றன.''

காஞ்சி மாமுனிவர் ஜெகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் நூற்றாண்டு விழாவிலே உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் கலாநிதி நாகநாதன் ஞானக்குமார் இவ்வாறு குறிப்பிட்டார். இலங்கைச் சைவமன்றத்தால் பருத்தித்துறை சிவன் கோவிலில் நடத்தப்பட்ட விழாவிற்கு மன்றத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமை வகித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி ஞானக்குமார், ''எளிமையின் இருப்பிடமாய், அடக்கத்தின் உறைவிடமாய், அருளாட்சியின் நிறைவிடமாய் வாழும் நடமாடும் தெய்வமாக சுவாமிகள் விளங்குவது இந்துக்கள் செய்த தவப் பயனேயாகும்'' என்று கூறினார்.

முன்னதாக சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு பிரம்மஸ்ரீ ரீ. வாசுதேவக் குருக்கள் மலர்மாலைகள் அணிவித்தார். சிவன்கோவிலில் 108 நாமாவளி அர்ச்சனையும் விசேட பூசைகளும் இடம் பெற்றன. (க)

## எயர்லங்கா

## பணிப்பாளர் சபை கலைப்பு; பழிவாங்கும் நடவடிக்கை?

கொழும்பு, ஜூலை 4

புதிய ஜனாதிபதியாக திரு. டி. பி. விஜேதுங்க பதவியேற்றதும் அவர் செய்த முதல் காரியம் எயர்லங்கா பணிப்பாளர் சபையைக் கலைத்துவிட்டு புதிய சபையை அமைத்தது என்பது தெரிந்ததே

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசின் கீழ் எயர்லங்கா இயங்கி வந்தபோது, வெளிநாட்டுப் பயணங்களை எயர்லங்கா விமானங்களில் பிரதமர் என்ற முறையில் திரு. விஜேதுங்கா மேற்கொண்ட போதெல்லாம் அவரை அப்போதைய எயர்லங்கா நிர்வாகம் ஓரம்கட்டி ஒதுக்கி வந்ததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒருமுறை திரு. விஜேதுங்க வாஷிங்டனில் ஒரு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு கொழும்புக்கு லண்டன் வழியாக திரும்பவேண்டியிருந்தது.

அதன்படி லண்டனில் வந்திறங்கிய திரு. விஜேதுங்காவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அவர் எதிர்பார்த்தபடி எயர்லங்கா விமானம் அங்கு இருக்கவில்லை. விமானம் தாமதமாகும் என்று அங்கிருந்த எயர்லங்கா ஊழியர்கள் விஜேதுங்காவுக்குத் தெரிவித்தனர்.

விமானம் வர மூன்று மணித்தியாலம் தாமதமாகும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் ஒருநாள் அவர் தங்க வேண்டியதாயிற்று அப்போது லண்டனில் பணிபுரிந்த இலங்கைத் தூதர் சேபால ஆட்டிகல விமான நிலையம் சென்று விஜேதுங்காவை ஹோட்டல் ஒன்றில் தங்க வைத்து உதவினார். லண்டனில் இருந்த எயர்லங்காவின் கிளை முகாமையாளர் விமான நிலையம் சென்று விஜேதுங்காவை சந்திக்கவே இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்போதைய எயர்லங்கா நிர்வாகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இன்னொரு குற்றச்சாட்டு, பிரதமர் என்ற முறையில் திரு. விஜேதுங்கா வெளிநாடுகளுக்கு எயர்லங்கா விமானத்தில் செல்லும்போதோ அல்லது திரும்பும்போதோ, எயர்லங்காவின் தலைவர் விமான நிலையம் செல்லாது புறக்கணித்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## சூழல் பாதுகாப்பு பற்றிய அறிவு கிராமங்கள் வரை பரவ வேண்டும்

### சூழல் கருத்தரங்கில் உரை

''புவிக்கோள் மாசுபடுவதைத் தனித்து ஒரு நாடு தடுக்க முடியாது. உலக நாடுகளின் கூட்டு முயற்சி மூலம் தான் சூழலைப் பாதுகாக்க முடியும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிய அறிவும் உணர்வும் அனைத்து நாடுகளிலும் கிராமிய மட்டம் வரை பரவலாக ஏற்பட வேண்டும்.''

உலக சூழல் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகம் நடத்திய சூழல் மாசடைதல், பேணல், அபிவிருத்தி குறித்த கருத்தரங்கில் உரை நிகழ்த்திய பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

புவியியற்றுறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் தலைமையில் கடந்த மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் சூழல் வெப்பம் அடைவதால் ஏற்படும் சுகாதாரத் தாக்கங்கள் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியர் உரை நிகழ்த்தினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது;

''ஓசோன் படை மண்டலத்தில் ஏற்பட்ட துவாரம், சூழல் மாசாடைந்த காரணத்தால் இப்பொழுது பத்து மடங்கு பெரிதாகியுள்ளது. இதனால் அதி ஊதாக் கதிர் வீச்சுக் காரணமாக புற்று நோய் அதிகரிக்கவும், நோய்த் தடுப்புச் சக்திகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பினால் தோல், சுவாசப் பகுதிகளில் சாதாரண கிருமிகளாற் கூட தாக்கங்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன'' என்று கூறினார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன், கலாநிதி சிவகடாட்சம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

சூழலைப் பேணுதலை வலியுறுத்தும் சுவரொட்டிப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வழங்கினார். (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் புஸ்பராசா

(களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். மாநகரசபை, யாழ்ப்பாணம்)

02-07-93 வெள்ளிக்கிழமை காலமாகிய சண்முகம் புஸ்பராசாவின் இறுதிக் கிரியைகள் இன்று (04-07-93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இல. 56, புதியவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. சுந்தரலிங்கம்
[மைத்துனர்]

56, புதியவீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
[26358]

## சின்னத்துரை நீக்லஸ்
## (செல்வரத்தினம்)

அச்சுவேலி தொழிற்பேட்டை வீதியைச் சேர்ந்த சின்னத்துரை நீக்லஸ் அவர்கள் 03-07-93 அன்று காலமானார்.

இவர் ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதியும், காலஞ்சென்ற சின்னத்துரை - அலங்காரம் அவர்களின் அருமை மகனும், இராணியின் பாசம்மிக்க கணவரும், சார்ள்ஸ் (தபால் திணைக்களம், அச்சுவேலி), ஸ்ரெல்லா ஆகியோரின் அன்புத் தந்தையும், பீற்றர், சிங்கம், மாசிலாமணி, அமிர்தம், தேசராஜா, வினிபிறேம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித திரேசா பாடசாலை, மகளிர் கல்லூரி, அச்சுவேலி), இராசாத்தி, நவரத்தினம், பேபி, டெய்சி ஆகியோரின் சகோதரரும், அமிர்தநாதன் இராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிறோயினி, நிஷாந்தன், டிலானி, எட்மன், டெஸ்மன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 4 7-93 (இன்று) காலை 9.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்துரை சிங்கமும்,
சகோதர சகோதரிகளும்

தென்மூலை,
அச்சுவேலி. (6307)

## செல்வி ரூபரஞ்சினிதேவி ஆறுமுகம்

செல்வி ரூபரஞ்சினிதேவி ஆறுமுகம் 22-6-93 இல் லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற சட்டத்தரணி சி. ஆறுமுகம்-அன்னலட்சுமி தம்பதிகளின் மகளும், சரோஷினிதேவியின் அன்புச் சகோதரியும், ஆறுமுகராசாவின் மச்சாளும், கமலலட்சுமி, செல்வலட்சுமியின் பெறாமகளும் தெய்வேந்திரராசாவின் மருமகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-6-93 இல் லண்டனில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ். ஆறுமுகராசா
[மச்சான்]

பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு: [26357]

## திருமதி
## கணபதிப்பிள்ளை அம்மாப்பிள்ளை

யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதி, 51 ஆம் இலக்க க. செ. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ் மருந்துக்கடை உரிமையாளர் காலஞ்சென்ற க. செ. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவி அம்மாப்பிள்ளை 3.7.93 இல் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் டும்.

தகவல்
வெ. கிருஸ்ணபிள்ளை

86, சட்டநாதர் வீதி
யாழ்ப்பாணம்
(26354)

## திருமதி
## வள்ளியம்மைப்பிள்ளை சிவப்பிரகாசம்

சுழிபுரம் திருமதி வள்ளியம்மைப்பிள்ளை அவர்கள் 3-7-93 அன்று கொழும்பில் காலமானார். அவர் காலஞ்சென்ற மு. சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், உஷாதேவி, சிவகுமாரன் (இலங்கை மத்திய வங்கி), சிவகணேசசுந்தரன் (அதிபர், ஐக்கிய சங்க வித்தியாலயம்), சிவராமன் (புறாணை), அமிர்தவேணி (ஆசிரியை, பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம்), கோமளாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசன் (கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பளை), சிவமனோகரி, வாணி (ஆசிரியை, வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை), யமுனா, விமலன் (உரிமையாளர், திருவள்ளுவர் அச்சகம்) ஆகியோரின் அன்பு மாமியும், ஐஸ்வரியா, சங்கர், நிரந்தரி, சுதந்தரி ஆகியோரின் அருமைப்பேர்த்தியும், தியாகராசா, காலஞ்சென்ற வித்துவான் பொன். முத்துக்குமாரன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. சிவகணேசசுந்தரன்
(மகன்)

பிரகாஷ்பதி
சுழிபுரம் (26360)

# தமிழர் பிரச்சினையை தீர்க்கும் எண்ணம் அரசுக்கு இல்லை

## விடுதலைப்புலிகள் இதழ் கருத்து

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை நேர்மையான முறையிலும், சமாதான வழியிலும் தீர்த்து வைக்கும் எண்ணம் புதிய அரசுக்கு இல்லை என்பது போர் கைதிகள் விவகாரத்தில் அரசு நடந்து கொண்ட முறையில் இருந்து தெளிவாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அதிகாரப்பூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஜூன் மாத இதழில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள போர்க் கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக தமிழ் மக்கள் மீதான பொருளாதாரப் பளுவை நீக்கவேண்டும் என்று இணக்கம் காணப்பட்ட ஓர் உடன்பாட்டை திடீரென இடைநிறுத்திய செயல் புதிய அரசின் தீவிர தமிழின விரோதப் போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

அத்துடன் தமிழரின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அரசியல் நகர்வுகளை அல்ல; இராணுவப் படையெடுப்புகளையே மேற்கொள்ள புதிய அரசும் முடிவு எடுத்துள்ளது.

அதேவேளை — தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கின் அரசியல் விவகாரங்களில் முடிவெடுக்கும் உரிமையும் நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் படைத்துறைத் தலைமையின் கைகளை சென்றடைந்துவிட்டதையும் இந்த விவகாரம் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு அந்த இதழில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கரும்புலிகள் தின சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வு கழகத்தினர், கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை மூளி கிராமத்தில் சிரமதானவேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அங்கு நடந்த சிரமதான வேலையில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

சிரமதானம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (இ-5)

## மேல்மாகாண ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறும் பட்சத்தில் மேல் மாகாண சபை ஆட்சி ஐ. தே. க, வுக்கு கைமாறுவதுடன் வடமேல் மாகாண சபை, தென் மாகாண சபைகளில் நிலவி வரும் குழப்பமான சூழ்நிலையும் தீர்ந்து விடும் என்று விக்ரர் ஐவன் தெரிவித்துள்ளார். [இ-6]

## புலிகள் அரசு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் மத்தியில் மிகைப்படுத்தப்பட்ட வகையில் பிரசாரம் செய்தனர். அவர்கள் உண்மை நிலைமையை மறைத்தும், தேவையற்ற முறையிலும் பிரசாரம் செய்துள்ளனர்.

இவர்களின் புரளியான பிரசாரங்களினால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நம்பிக்கையீனம் வளரலாயிற்று.

இந்நிலையில் மக்களும் அரசும் வழி தவறி, உண்மை நிலையை உணராது விரும்பத்தகாத விளைவு ஏற்பட்டுள்ளது.

சிங்கள மத்தியில் பத்திரிகையாளர்கள் நல்ல முறையில் பிரசாரம் செய்திருந்தால், நிலைமை வேறாக இருந்திருக்கும் ஆனால் அவர்கள் செய்த விஷமப்பிரசாரம் பேச்சுவார்த்தையைக் குழப்பியடித்து விட்டது.

—இவ்வாறு அஸாஜிதேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

## குடாநாட்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தார்.

விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட சரத் குணவர்த்தனா என்ற மற்றும் ஒரு பொலீஸ்காரரும் இதே வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்றுவருகிறார்.

பத்திரிகையாளரான எல்மோ பெர்னாண்டோவுக்கு இவர் அளித்த பேட்டியில்-

தாம் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது யாழ். ஆஸ்பத்திரியில் நான்கு தினங்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்றதாகவும், அதனைக் கேள்வியுற்ற அப்பகுதி தமிழ்மக்கள் நூற்றுக்கணக்கில் வந்து தம்மைப் பார்வையிட்டதுடன் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

இனப்போர் என்ற போர்வையில் சாதாரண சிங்கள — தமிழ் மக்கள் மத்தியில் துவேஷத்தைப் பரப்ப எத்தனிப்பவர்கள் தற்போது கொழும்பு வந்துள்ள பொலீஸார் தெரிவிக்கும் கருத்துக்களைச் செவிசாய்ப்பார்களானால் பிரச்சினை தீருவதற்கு பெரும் பயனளிக்கும் என அவதானிகள் கருதுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

# மரண அறிவித்தல்கள்

## R. K. சுப்பிரமணியம்

(பணிப்பாளர் - பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்)
(இரத்தினபுரி)

சுழிபுரம் கிழக்கு திசமளையைச் சேர்ந்த இராமலிங்கம். கந்தையா. சுப்பிரமணியம், 2 - 7 - 93 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற மு. நாகலிங்கம் (J. P), நாகம்மா தம்பதியின் மூத்த மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், பத்மராணி, அருள்மொழித்தேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவனேசனின் (ஆசிரியர் • மானிப்பாய் மெமோரியல் பாடசாலை) அன்பு மாமனாரும், இரத்தினம் (சவூதி அரேபியா), பாலசிங்கம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம் K K. S) புவனேஸ்வரி, மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவதர்சினி, சிவதாரணி, பிரணவன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும், இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பத்மாவதி,
சுப்பிமணியம்.
(மனைவி)

வீரபத்திரர் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு.
23656

## திருமதி
## வள்ளிநாயகியம்மா சுப்பிரமணியம்

திருமதி வள்ளிநாயகியம்மா சுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற V.K சுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் சுதுமலை தெற்கு சின்னத்தம்பி — அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும், வி.கே சிதம்பரநாதன் (இலங்கைப் பாராளுமன்றம்), காலஞ்சென்ற ராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆறுமுகம், வி.கே. பாலசுப்பிரமணியம், வி.கே. சண்முகநாதன் (வர்த்தகத் திணைக்களம், சுன்னாகம்), வி.கே. நமசிவாயம் (அபுதலி பிறதேர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜேஸ்வரி சிதம்பரநாதன், க. ஆறுமுகம் (இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்), நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (R D.O உடுவில்), பூமதி சண்முகநாதன், ஜெயந்தி நமசிவாயம் ஆகியோரின் அன்பு மாமியாரும் நாகரட்ணம், காலஞ்சென்றவர்களாகிய சங்கரப்பிள்ளை, கந்தையா, நல்லையா, சுந்தரம் குமாரசாமி, கதிர்காமர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 4 7.93 இன்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
ஆ. சடகோபன்
(பேரன்)

"சடாவதனம்"
சுதுமலை தெற்கு
மானிப்பாய் (26359)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org